

குறள்நெறி


எண்பதாம் விடுதலைநாள் சிறப்பிதழ்

-குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்-

மின்னிதழ்:129 - ஆடி- 25--தி.பி.2057 ஆகத்து—10-- பொ.ஆ.2026

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்





















சிறப்பாசிரியர்குழு: முனைவர் பொற்கோ (முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்) முனைவர் இர.பிரபாகரன் (மேரிலாந்துஅமெரிக்க)முனைவர்அன்புசெயா(சிட்னிஆத்திரேலிய)பாவலர்முரசுநெடுமாறன்(மலேசியா) பேரா.மன்னர்மன்னன் (மலேசியர்பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ(பிரான்சு)கவிஞர்அழ.பகீரதன் (இலங்கை)கலாநிதி சபந்தினி விக்னராசன் (இலங்கை) பொறியாளர்.இராசகுமார்(ஆபர்லாந்து)எலியாசு(சிங்கப்பூர்)திருமதி.மதிவதனி பத்மநாதன் (சுவிட்சர்லாந்து) திருமதி.தாமரை சீனிவாசராவ்(கம்போடியர் முனைவர் இராம சுந்தரம் (கொரியா) தீனதயாளன்(கனடா) பேராசிரியர் தமிழியலன் (சென்னை) இணையாசிரியர்; பாவலர் செல்வ.மீனாட்சிசுந்தரம் பொறுப்பாசிரியர்: மறைமலை இலக்குவனார்

இந்த விடுதலை நன்னாளில் ஒரு சில விடுதலை வீரர்களையாவது நினைவுகூர்வோம்

மருது பாண்டியர்(பெரிய மருது பாண்டியர் & சின்ன மருது பாண்டியர்)

இன்றைய விருதுநகர் மாவட்டம், நரிக்குடிக்கு அருகில் உள்ள முக்குளம் என்ற கிராமத்தில் வாழ்ந்த மொக்க பழநியப்பன் என்பவருக்கும், அவரது மனைவி ஆனந்தாயி என்ற பொன்னாத்தாள் என்பவருக்கும் மகனாக 1748 திசம்பர் 15 இல் மகனாகப் பிறந்தவர் பெரிய மருது பாண்டியர். ஐந்து ஆண்டுகள் கழிந்து 1753 ஏப்ரல் 20 இல் சின்ன மருது பாண்டியர் பிறந்தார். பெரிய மருது பாண்டியர் வெள்ளை நிறத்துடன் இருந்ததால் வெள்ளை மருது பாண்டியர் என்ற பெயரும் உண்டு. பெரிய மருதுவை விட உயரத்திற் சிறியவராக இருந்ததால் இளைய மருது சின்ன மருது பாண்டியர் என்று அனைவராலும் அழைக்கப்படலானார்.

இவ்விருவரும் சிவகங்கைச் சீமையின் அரசர் முத்து வடுகநாதரின் போர்ப்படையில் வீரர்களாகச் சேர்ந்து தமது திறமையை நிரூபித்தனர். இவர்களின் வீரத்தை கண்டு மெச்சிய மன்னர் முத்து வடுகநாதர் மருது சகோதரர்களை தன் படையின் முக்கிய பொறுப்புக்களில் நியமித்தார்.

சிவகங்கைச் சீமை மீட்பு

திருப்பத்தூரில் மருதிருவருக்கு அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூண்

ஆற்காடு நவாப் வரி வசூலை ஆங்கிலேயருடன் பங்கிட்டுக் கொள்வதாக ஒப்பந்தம் செய்து கொண்ட ஜோசப் ஸ்மித் தலைமையிலான கம்பெனிப் படை 1772 இல் இராமநாதபுரத்தைக் கைப்பற்றிய பின் உடனடியாகச் சிவகங்கை மீது போர் தொடுத்தது. இந்த திடீர் தாக்குதலை எதிர்பாராத அரசர் முத்து வடுகநாதர் காளையார் கோவில் போரில் பலியானதால் அவரது பட்டத்தரசி வேலுநாச்சியார், மகள் வெள்ளச்சி, அமைச்சர் தாண்டவராயன் பிள்ளை, மருது சகோதரர்கள் ஆகியோர் திண்டுக்கல் அருகே விருப்பாட்சி காட்டுக்குத் தப்பிச் செல்கின்றனர்.

1772 இற்குப் பிறகு காட்டில் மறைந்து வாழ்ந்த மருது சகோதரர்கள் தமது கிளர்ச்சியை 1779 இல் தொடங்கி ஆற்காட்டு நவாப், தொண்டைமான், கும்பினியார் ஆகியோரின் படைகளை வெற்றி கொண்டு 1780 இல் சிவகங்கைச் சீமையை மீட்டு வேலு நாச்சியாரை மீண்டும் அரியணையில் அமர்த்தினர். இந்தப் போர் சோழவந்தானில் தொடங்கி சிலைமான், மணலூர், திருப்புவனம், முத்தனேந்தல் என நடைபெற்று கடைசியாக மானாமதுரையில் போர் பயிற்சியே பெறாத சுதந்திர தாகமிக்க மக்களின் உதவியோடு போர் வெற்றி பெற்றது. மேற்கில் திண்டுக்கல்லிலிருந்து தக்க சமயத்தில் வந்த ஹைதர் அலி யின் படையும் வெற்றிக்கு உதவியது. வேலு நாச்சியாரை மீண்டும் ஆட்சியில் மருதுபாண்டிய சகோதரர்கள் அமர வைத்தனர்.

வழிபாட்டுத் தலங்களும் சமய ஒற்றுமையும்

மருது சகோதரர்களின் ஆட்சி மத ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றுக்குக் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. இவர்கள் முஸ்லிம்களுக்கும் கிறித்தவர்களுக்கும் வழிபாட்டு இடங்களை அமைத்துக் கொடுத்தனர்.

இவர்கள் காளையார் கோவில் கோபுரத்தைக் கட்டியதுடன் குன்றக்குடி, திருமோகூர் கோயில்களுக்கும் திருப்பணி செய்தனர்.

மானாமதுரையில் உள்ள ஆனந்தவல்லி அம்மன் உடனுறை சோமநாதர் கோயிலுக்கு கோபுரம் கட்டித் தேரும் செய்தளித்துள்ளனர். மருது பாண்டியர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இத்திருக்கோயிலின் பெருமை பற்றிப் சிவகங்கைக் கவிஞர் வேதாந்தம் சுப்பிரமணியம் வானர வீர மதுரைப் புராணத்தை இயற்றியுள்ளார். இந்நூலின் இறுதி பாடல் மருது சகோதரர்களை “யதுகுல மருது பூபன் மைந்தர்கள் ” என்று குறிப்பிடுகிறது.

இளையவரான “சின்ன மருது” அரசியல் தந்திரம் மிக்கவராக விளங்கினார். இவர்கள் தஞ்சாவூர் முதல் திருநெல்வேலி வரை மாபெரும் அரசியல் கூட்டணி ஒன்றைத் தொடங்கி ஆங்கிலேயருக்கு எதிரானப் போராட்டத்திற்கு வித்திட்டனர்.

சின்ன மருதுவின் **ஜம்புத் தீவு பிரகடனம்**

மருது சகோதரர்கள், பாஞ்சாலங்குறிச்சி ஊமத்துரை, சிவத்தையா தம்பி, மீனங்குடி முத்துக்கருப்பத்தேவர், சித்திரங்குடி மயிலப்பன் சேர்வை, விருப்பாச்சி கோபாலர், தேளி யாதுலர், பழசி கேரள வர்மா, மறைந்த திப்புவின் தளபதி தூந்தாகி வாக் ஆகியோருடன் ஆங்கிலேயருக்கு எதிராக தென்னிந்திய கூட்டமைப்பை உருவாக்கினர்.

1801 சூன் 12 ஆம் தேதி சின்ன மருது திருச்சி திருவரங்கம் முதலிய இடங்களில் வெளியிட்ட அறிக்கை “ஜம்புத் தீவு பிரகடனம்” என அழைக்கப்படுகிறது. அவ்வறிக்கையின் மூலம் எல்லா இனங்களையும் சேர்ந்த மக்கள் நாட்டுப் பற்று மிக்க பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் தொடுக்க வேண்டுமென்றும் அறை கூவல் விடுக்கப்பட்டது.

1857 சிப்பாய்க் கலகத்திற்கு அரை நூற்றாண்டிற்குமுன் நடந்த இந்திய தென்னிந்தியப்புரட்சியே முதல் ஒருங்கிணைந்த விடுதலைப் போராட்டமாக பல வரலாற்றாய்வாளர்களால் கருதப்படுகிறது.

வீரமங்கை இராணி வேலுநாச்சியார் (Velu Nachiyar)

பதினெட்டாம் நூற்றாண்டில் வீரசாகசம் படைத்த சிவகங்கைப் பகுதியின் அரசி ஆவார். பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினார். இவரே இந்தியாவில் விடுதலைக்காகப் போராடிய முதல் அரசி ஆவார்.

இளமை

1730-ஆம் ஆண்டு, வேலுநாச்சியார் இராமநாதபுரம் சமஸ்தான மன்னர் செல்லமுத்து விஜய ரகுநாத சேதுபதி - சக்கந்தி முத்தாத்தாளுக்கு ஒரே மகளாகப் பிறந்தார். ஆண் வாரிசு போல வளர்க்கப்பட்டார். ஆயுதப் பயிற்சி பெற்றார்; பல மொழிகள் கற்றார். 1746-இல் சிவகங்கைச் சீமை மன்னர் முத்துவடுகநாதத்தேவருக்கு மனைவியானார்.

ஆங்கிலேயர் படையெடுப்பு

1772-இல், ஐரோப்பியரின் படையெடுப்பால் கணவரை இழந்த வேலுநாச்சியார் நாட்டை மீட்டெடுக்க காத்திருந்தார். இந்தப் படையெடுப்பை எதிர்க்க நினைத்த வேலுநாச்சியார் விருப்பாட்சியில் தங்கி ஐதர் அலியைச் சந்தித்து உருது மொழியில் ஆங்கிலேயர் எதிர்ப்புப் பற்றி விளக்கிப் பேசினார். வேலு நாச்சியாரின் உருது மொழித் திறமையைக் கண்டு வியந்த ஐதர் அலி உதவிகள் பல செய்வதாக உறுதியளித்தார். எட்டு ஆண்டு காலம் திண்டுக்கல் கோட்டை, விருப்பாட்சிக் கோட்டை, அய்யம்பாளையம் கோட்டை என இடம் மாறி மாறி முகாமிட்டு வாழ்ந்து வந்தார். மருது சகோதரர்களின் பெரும் முயற்சியினால் சிவகங்கை மக்களை ஒன்று திரட்டி ஓர் எதிர்ப்புப்படை ஒன்று உருவாக்கப்பட்டது. வேலுநாச்சியார் மற்றும் மருது சகோதரர்களே இப்போராட்டத்துக்குத் தலைமை தாங்கினர். வேலு நாச்சியார் திருப்பத்தூர் படைக்கு நன்னியம்பலம், சேதுபதி அம்பலம் ஆகிய கள்ளர் தலைவர்களையும், காளையார் கோவில் படைப்பிரிவிற்கு மருது சகோதரர்களையும் தலைமையேற்கச் செய்தார். நன்னியம்பலம் தலைமையில் திரண்ட மூவாயிரம் படை வீரர்கள் எட்டுப் பீரங்கிகளைக் கொண்டு திருப்பத்தூர் கோட்டையைக் கைப்பற்றினர். வேலு நாச்சியார் மீண்டும் ஆட்சியில் அமர இவர்கள் முக்கிய பங்காற்றினார்.

படை திரட்டல்

08.12.1772 அன்று, சிவகங்கை பிரதானி தாண்டவராய பிள்ளை இராணி வேலு நாச்சியாருக்காக ஐதர் அலிக்கு அனுப்பிய கடிதத்தில், "ஆற்காடு நவாப், இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய இரு தன்னரசுகளையும் ஆக்கிரமித்து அழிவை ஏற்படுத்தி வருகிறார். அங்கிருந்து தப்பி வந்த நான் கள்ளர் தலைவர்களுடன் காடுகளில் தங்கி கிளர்ச்சியைத் தொடர்ந்து வருகிறேன். இந்த முயற்சியில் எனக்கு யார் உதவி செய்தாலும், இன்னும் சிறந்த சாதனைகளை இயற்றமுடியும். ஆகையால், தாங்கள் ஐயாயிரம் குதிரை வீரர்களையும் போர் வீரர்களையும் அனுப்பி வைத்தால், அவர்களது படிச் செலவை நான் ஏற்றுக் கொண்டு அவர்களுடன் இணைந்து இந்த இரு தன்னரசுகளையும் மீண்டும் கைப்பற்ற இயலும். அத்துடன், மதுரைக்கும் படைகளை அனுப்பி வைத்து அந்தச் சீமை முழுவதும் எதிர் நடவடிக்கைகளைத் தொடங்கி வைக்கவும் இயலும். அங்குள்ள பாளையக்காரர்களும் நமக்கு ஒத்துழைப்பு நல்குவார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார். 1780- ஆண்டு ஜூன் மாதம் ஒரு படை திண்டுக்கல்லிலிருந்து சிவகங்கை நோக்கிப் புறப்பட்டது. ஹைதர் அலி 5000 குதிரை வீரர்களையும் போர்வீரர்களையும், பீரங்கிப்படை ஒன்றையும் அனுப்பி வைத்தார். படை வைகை ஆற்றின் வழியில் சோழவந்தானையும், பிறகு சிலைமானையும், அதன் தொடர்ச்சியாக திருப்புவனம், முத்தனேந்தல் நகரங்களையும் வென்ற பிறகு, போர் பயிற்சி பெறாத மக்களின் துணைகொண்டு, இறுதிப் போராக மானாமதுரை நகரத்தில் அந்நியர்களை வெற்றிக்கொண்டனர்.

இறுதி நாட்கள்

1793-இல் வேலு நாச்சியாரின் பேத்தியின் மரணத்தால் நாச்சியார் துயரில் மூழ்கினார். அதனால் விருப்பாட்சி அரண்மனையில் தங்கினார். பெரும் போராட்டங்களை நடத்தி நாட்டை மீட்ட வேலுநாச்சியார் டிசம்பர் 25, 1796 அன்று இறந்தார்.

வேலுநாச்சியார் நினைவாக

18 சூலை 2014 அன்று, சிவகங்கை மாவட்டம், சூரக்குளத்தில் இந்திய ரூபாய் 60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வீர மங்கை வேலு நாச்சியார் நினைவு மண்டபத்தை, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா, காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்.வேலு நாச்சியார் பயன்படுத்திய ஈட்டி, வாள் முதலான பல பொருட்கள் சிவகங்கையில் அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன. இந்திய அரசு, இராணி வேலு நாச்சியார் நினைவாக, 31 டிசம்பர் 2008 அன்று அஞ்சல்தலை ஒன்றை வெளியிடப்பட்டது.

வ.உ.சிதம்பரனார் குறித்து மு.வரதராசனார் எழுதிய பாடல்

ஒழுக்கத்தின் உரவோய் நாட்டின்

உரிமைப்போர் நடந்த காலை

எழுச்சியின் தலைமை ஏற்றே

இணையிலாத் தியாகம் செய்தோய்

மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும்

முற்றிலும் ஒன்றி நிற்க

விழிப் பொறி இரண்டும் போல

விழுப்பமாய்க் கொண்டாய் அய்யா

பாரதி பெற்ற நண்ப

பழியிலா வீர வாழ்க்கை

பாரெல்லாம் ஏத்தும் வண்ணம்

பண்புடன் நடத்தி நின்றோய்

வேருடன் நைந்து வாடி

வெள்ளையர் ஆட்சி வீழ

நேரிலாப் போர்கள் செய் தாய்

நித்தமும் நின் பேர் வாழி"

காந்தி புராணம் பாடிய அசலாம்பிகை அம்மையார்

அசலாம்பிகை என்பவர் பெண்களுக்கும் இளம் விதவைகளுக்கும் பல்வேறு உரிமைகள் மறுக்கப்பட்ட காலத்தில் அதையெல்லாம் புறக்கணித்து, இளம் வயதில் கணவனை இழந்த நிலையிலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று தமிழறிஞராக மாறியவர். இவர் சிறந்த சொற்பொழிவாளராகவும் இருந்தார்.

பிறப்பும் கல்வியும்

திண்டிவனம் அருகில் உள்ள இரட்டணை என்ற ஊரில் 1875 ஆம் ஆண்டில் பிறந்த இவர் பத்தாவது வயதில் திருமணம் முடிந்து கணவனையும் இழந்தார். அன்றைய காலகட்டத்தில் கணவனை இழந்தவர்கள் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத சமூகக் கட்டுப்பாடுகள் அதிகமிருந்த நிலையில் அவரின் தந்தை பெருமாள் அய்யர் இவரைப் படிக்க வைக்க விரும்பினார். ஆசிரியரை வீட்டுக்கு வரவைத்து பாடங்கள் நடத்த ஏற்பாடு செய்தார். இதற்காக அந்த ஊரை விட்டு வெளியேறி திருப்பாதிரிப் புலியூரில் குடியேறினார். அசலாம்பிகை தமிழ் இலக்கண இலக்கியங்களில் சிறந்த புலமை பெற்றார்.

பேச்சாளர்

அசலாம்பிகை தம்மைப் போலவே மற்ற பெண்களும் படிக்க வேண்டும் என்று விரும்பினார். அவரைத் தேடி வரும் பெண்களுக்குக் கற்பிக்கத் தொடங்கினார். அவர்களிடம் பெண்கள் முன்னேற்றத்திற்கான கருத்துகளைப் பேசியதுடன், அவற்றைப் பாடல்களாக இயற்றித் தந்தார். அடுப்படியே வாழ்க்கை எனக் கிடக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்காக பல மேடைகளில் பேசவும் பாடவும் செய்தார். அவற்றை கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் இதழ்களில் எழுதி வெளி உலகுக்கு அறிமுகம் ஆனார்.

பெண் விடுதலை பற்றிய சிந்தனைகளுடன் இந்திய விடுதலை குறித்த கருத்துகளையும் அவர் மேடைகளில் பேசினார். இவர் வடலூர் வள்ளலாரின் பொது நெறி குறித்தும் பல மேடைகளில் பேசியிருக்கிறார். பல வெளியூர்களில் இவர் பேசத் தொடங்கிய பின்பு “திருப்பாதிரிப்புலியூர் அசலாம்பிகை அம்மையார்” என்று புகழ் பெற்றார்.

திரு.வி.க. பாராட்டு

“பண்டிதை அசலாம்பிகை அம்மையாரின் தமிழ் அமிழ்தை யான் இளைஞனாயிருந்த போது பன்முறை பருகினேன். திருப்பாதிரிப் புலியூரில் அத்தமிழ்த் தாயை நேரிற் கண்டு உறவாடுஞ் சேயானேன்.” என்று திரு.வி.க. இவரைப் பற்றி பல இடங்களில் கூறுவார் என்பது இவருக்குரிய தனிச்சிறப்புகளில் ஒன்று.

எழுதிய நூல்கள்

ஆத்திசூடி வெண்பா

இராமலிங்க சுவாமிகள் வரலாற்றுப் பாடல்

குழந்தை சுவாமிகள் பதிகம்

திருவாமாத்தூர்ப் புராணம்

திருவுடையூர் (மேல்சேவூர்) தலபுராணம்

காந்தி புராணம்

திலகர் புராணம்

இக்கால ஔவையார்

திரு.வி.க அவர்கள் இவரை இக்கால ஔவையார் என்று அழைத்தார்.

மதுரகவி பாஸ்கரதாசு

பாஸ்கர தாஸ் எனப்படும் மதுரகவி பாஸ்கரதாசு (1892 - 1952) தமிழ்த்திரையுலகின் முதல் திரைப்பாடலாசிரியரும் பன்முகப் பரிமாணங்களைக் கொண்ட கலைஞரும் ஆவார். இவர் தன்னுடைய 16-வது வயதில் பாடல்களை எழுதத் தொடங்கினார். இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியின் அவைக்கவிஞராக அங்கிகரிக்கப் பெற்று வெள்ளைச்சாமி என்ற இயற்பெயரை இழந்து பாஸ்கர தாஸ் என்று அழைக்கப்பெற்றார். 1931-இல் தமிழ் திரையுலகின் முதல் பேசும் படமான காளிதாஸில் அனைத்துப் பாடல்களையும் எழுதித் தமிழ் திரையுலகின் முதல் திரைப்பாடலாசிரியரானார். இத்திரைப்படத்திற்குப் பாஸ்கரதாஸ் தன்னுடைய நாடகத்திற்கு எழுதிய பாடல்களும் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இவர் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் கைவரப்பெற்றவராக இருந்துள்ளார். இதனால் திரைக்கதை, உரையாடல், பாடல்களை எழுதுபவராகவும், நாடக நடிகராகவும், நடிப்பு பயிற்சியாளராகவும் இருந்துள்ளார். இத்துடன் கிராமிய நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிப்பவராகவும், புதிய இசையுருக்களை

அமைத்தவராகவும் உள்ளார். இவருடைய பாடல்கள் 'மதுரகவி பாஸ்கரதாஸ் கீர்த்தனைகள்' என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளது.

வரலாறு

இளமை

தாஸ் 1892-ஆம் ஆண்டு ஜூன் 6-ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம் என்ற ஊரில் பிறந்தார்.

நாகலாபுரம் பள்ளிவாசல் தெருவில் இவர் பிறந்து மறைந்த வீடு சிதிலமடைந்த நிலையில் இன்றும் உள்ளது

வெள்ளைச்சாமி என்பது இவரது இயற்பெயர். இளவதிலேயே மதுரையில் தனது பாட்டி வீடு சென்று வசித்தார். அங்கு நாடகக் கலைஞராய் மலர்ந்தார். ராமனாதபுரம் சேதுபதி மன்னர் இவரைத் தனது அரசவையில் பாடவைத்து “முத்தமிழ் சேத்திர மதுரகவி பாஸ்கரதாசு” என்ற பெயரைச் சூட்டினார். இதில் பாஸ்கரன் என்பது பஸ்கர சேதுபதி மன்னரைக் குறிக்கும்.

இவருக்கு ஆண் குழந்தைகள் வேல்சாமி, சேது, மருதுபாண்டி, தினகரன், மனோகரன் பெண் குழந்தைகள் சரஸ்வதி, இந்துராணி, ஜானகி, முத்துலட்சுமி, காந்திமதி, கமலா ஆகியோர் ஆகும். இவருடைய இரண்டாவது மனைவி பெயர் ஒண்டியம்மாள்

புலமை

பாஸ்கரதாஸ் தன்னுடை 16-ஆவது வயதில் பாடல்களை எழுதத்தொடங்கினார்.இவரது முதல் பாடல் தொகுதி 1915-இல் பக்தி ரச கீர்த்தனை என்ற பெயரில் வெளிவந்தது. 1925-இல் இந்து தேசபிமானிகள் செந்தமிழ் திலகம் நூலை வெளியிட்டார். இதன் இரண்டாம் பாகத்தினை 1925-இல் வெளியிட்டார்.

காந்திய ஈடுபாடு

காந்தியக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட பாஸ்கரதாசு கதராடையையே அணிந்தார். கடைசி வரை பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாய் நின்றுள்ளார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாடல்களை எழுத மேடையில் பாடியதற்காக 29 முறை கைது செய்யப்பட்டுள்ளார். இவரது பாடல்களைப் பாடிய விஸ்வநாததாசு, காதர்பாட்சா போன்ற கலைஞர்களும் அக்காலத்தில் காவலர்களால் மேடையில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளனர். 1921-இல் காந்தியடிகள் மதுரை வந்த பொழுது காந்தியோ பரம ஏழை சந்நியாசி என்ற பாடலை எழுதினார். அதனைக் காந்தியடிகள் கேட்டார்.

பண்பு நலன்கள்

தனக்கு மேடையிலும், தனிப்பட்ட முறையிலும் கிடைக்கும் பணம் மற்றும் பரிசுகள் சககலைஞர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாக வாழ்ந்துள்ளார். சாதி வேறுபாடுகளைப் பாராமல் சக கலைஞர்கள், தலித்துகள் வீடுகளில் சாப்பிட்டு, அவர்களுக்கும் தனது வீட்டில் விருந்தளித்திருக்கிறார். தீண்டாமையை எதிர்த்தவராக இருந்துள்ளார். சாதிக்கொடுமைகள் மலிந்த அன்றைய சமூகத்தில் கலப்புத் திருமணம் செய்து வைக்கும்

செல்வாக்குமிக்கவராய்த் திகழ்ந்துள்ளார். அதுமட்டுமல்ல, அவ்வாறு செய்வித்த ஒரு மணப்பெண்ணுக்கு ஒரு தங்கச் சங்கிலியும் பட்டுச்சேலையும் வாங்கிக் கொடுத்துள்ளார். தனக்குக் கிடைக்கும் பணத்தை எல்லாம் வாரி இறைத்திருக்கிறார். பணமில்லாத போது நோட்டு எழுதியும், சொத்தை அடமானம் வைத்தும் கடன் வாங்கிக் கூட பலருக்கு உதவியுள்ளார். நாடகத் துறைப் பணிகளோடு அவர் விவசாயமும் தொடர்ந்து செய்து வந்தார்.

ஒருமுறை தேவர் குலத்தவர்கள் மாநாடு ஒன்று கூட்டியிருக்கிறார்கள். அந்த மாநாட்டிற்கு மதுரகவி பாஸ்கரதாஸை அழைத்தபோது ஒரு ஜாதியின் பெயரால் கூட்டப்படும் மாநாட்டிற்கு வரமாட்டேன் என்று சொன்னார். மதுரகவி பாஸ்கரதாஸ் இந்து மதத்தைச் சேர்ந்தவராயினும், அவர் எல்லாச் சாதியர்களோடும் மதத்தினரோடும் நல்லுறவு கொண்டு அற்புத மனிதராகத் விளங்கினார்.

விடுதலைப் போரில் ஈடுபாடு

விடுதலைப் போராளிகள் போராட்டங்களை நடத்திச் சிறை சென்ற காலத்தில் தாஸ் தனது நாடகங்கள், பாடல்கள் மூலம் மக்களுக்குத் தேசபக்தியூட்டியுள்ளார். விடுதலைப் போரில் மக்கள் உற்சாகமுடன் பங்கேற்க அவரது பாடல்கள் உதவியுள்ளன. இவரது பாடல்கள் பெரும்பாலும் விடுதலைப் போராட்ட வீரர்கள், அவர்களது தியாகங்கள், குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சிகள் பற்றியதாகவே அமைந்தது. ஆங்கிலேயருக்கு அஞ்சாமல் ஒவ்வொரு பாடலிலும் தனது பெயரையும் பதிவு செய்துள்ளார். மதுரை காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வைத்தியநாதய்யருடன் பேசி மதுரையில் நடிகர்களைத் திரட்டி, கள்ளுக்கடை மறியல் போராட்டம் நடத்தினார் தாசு. புதுச்சேரி சென்று மூன்று மாத காலம் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார்.

தலைவர்களுடனான தொடர்புகள்

தாஸ் தனது காலத்தில் வாழ்ந்த விடுதலைப் போராளிகள் காந்தி முதல் அனைத்துத் தலைவர்களோடும் தொடர்புடன் இருந்துள்ளார். காந்தியைப் பற்றிப்பாடல் எழுதி அவரிடமே கொடுத்தார். நாமக்கல் கவிஞர் போன்ற அவர் காலத்திய கவிஞர்களோடும் நெருக்கமாக இருந்தார். ஈ.வே.ரா, இ.மா. பாலகிருஷ்ண கோன், அரியக்குடி ராமானுஜம் அய்யங்கார், எம்.எஸ். விஜயாள், முத்துராமலிங்கத் தேவர், தண்டபாணி தேசிகர் எனப் பல தமிழ்நாட்டு வரலாற்று நாயகர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

நாடகம்

நாடகத்தில் தீவிர ஈடுபாடுகொண்டவர் வெள்ளைச்சாமி என்ற பாஸ்கரதாசு. தமிழகம் முழுவதும் சுற்றிய இவர் கொழும்பு யாழ்ப்பாணம் முதல் ஆலப்புழை வரை சென்று நாடகங்கள் நடத்தியுள்ளார். பின்னாளில் கம்யூனிஸ்ட்டுத் தலைவரான கே.பி.ஜானகியம்மாள் ஸ்திரீபார்ட் நடிகையாக இவரது ஏராளமான நாடகங்களில் நடத்துள்ளார். தாஸ் மதுரை அமெரிக்கன்கல்லூரி மாணவர்கள், மற்றும் பள்ளி மாணவர்களுக்கு தனித்தனியே நாடகப் பயிற்சியளித்துள்ளார். அவர் எழுதிய பாடல்களில் பனங்காட்டுப் பாடல்கள், சேவல் கட்டுப்பாடல், வன்னிமரப்பாடல்கள் ஆகியவைக் குறிப்பிடத்தக்கன.

அக்கால நாடகக் கலைஞர்கள் அனைவரோடும் குருபீடத்தில் மதிக்கப்பட்டுள்ளார். எம்.எஸ்.சுப்புலெட்சுமி, கிட்டப்பா, கே.பி.சுந்தராம்பாள் போன்ற கலைஞர்கள் இவர் இயற்றிய பாடல்களைப் பாடியுள்ளனர்.

நடிகர்களுக்கு மனக் குவிப்பு, நடுங்காத தேகம், நினைவாற்றல், குரல் வலிமை, உடை, ஞானம் ஆகியன பற்றி வகுப்புகள் நடத்தியுள்ளார்.

இசை வெளியீடுகள்

1925-இல் 'இந்து தேசாபிமானிகள் செந்தமிழ் திலகம்' என்னும் பாடல் நூலை வெளியிட்டார். இவரது பாடல்கள் சாதாரண வர்ண மெட்டுகளுடன் எளிதாகப் பாடக் கூடியவையாயிருந்ததால் மக்களிடையே பெரும் வரவேற்புப் பெற்றன. இவரின் இசைப் பாடலகளைக் கேட்ட மகாத்மா காந்தி இவரைப் பாராட்டி உள்ளார். இவரது பல நாடக மேடைப் பாட்டுகளும் தனிப் பாடல்களும் 'பிராட்காஸ்ட்' என்ற நிறுவனத்தின் கிராம்ஃபோன் தட்டுகளாக வெளிவந்தன. அதிலும் ‘வந்தே மாதரமே, நம் வாழ்விற்கோர் ஆதாரமே’ என்னும் பாட்டு மக்களிடையே மிகப் புகழடைந்தது. மதுரையில் 1940-களில் இயங்கிய சித்ரகலா என்ற ஸ்டுடியோவுடன் பாஸ்கரதாஸ் தொடர்பு கொண்டிருந்தார். எம்.எஸ். சுப்புலட்சுமிக்குப் பாஸ்கரதாஸ் பாட்டுகள் எழுதித் தந்துள்ளார்.

இறுதிக்காலம்

நடிகர்களின் அமைப்பிற்கெல்லாம் முன்னோடியாய் அமைந்த மதுரை நடிகர் சங்கத்தை 1926-இல் தோற்றுவித்தவர் பாஸ்கரதாஸ் ஆவார். இவரது இறுதிக்காலம் மருந்துகளுடனும் நோயுடனுமே கழிந்தது. இம்மாபெரும் கலைஞர் 20.12.1952-இல் நாகலாபுரத்தில் காலமானார். இவரைச் சிறப்பிக்கும் வகையில் மதுரையில் இவர் வாழ்ந்த பகுதிக்கு 'மதுரகவி பாஸ்கரதாஸ் சாலை' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சமாதி

பாஸ்கர தாஸின் சமாதி நாகலாபுபரத்தில் அமைந்துள்ளது.

நூல்கள்

பக்தி ரச கீர்த்தனைகள் - 1915

இந்து தேசபிமானிகள் செந்தமிழ் திலகம் - பாகம் 1 - 1925

இந்து தேசபிமானிகள் செந்தமிழ் திலகம் - பாகம் 2 - 1928

நாட்குறிப்பு

பாஸ்கர தாஸ் நாட்குறிப்பு எழுதும் வழக்கமுடையவராக இருந்தார். இவர் 1917 முதல் 1951வரை எழுதியுள்ள நாட்குறிப்புகள் தொகுக்கப்பெற்று மதுரகவி பாஸ்கரதாஸின் நாட்குறிப்பு எனும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இதனை பாஸ்கர தாசின் மகள்வழிப் பேரன் ச. முருகபூபதி தொகுத்தார்.

பாடல் எழுதிய திரைப்படங்கள்

பாஸ்கர தாஸ் பத்து திரைப்படங்களுக்கு திரைப்பாடல்களை எழுதியுள்ளார்

காந்தியடிகளுக்குத் தமிழ் கற்றுக்கொடுத்த

தில்லையாடி வேதியன்பிள்ளை

தில்லையாடி என்னும் ஊரின் பெயரைக் கேட்டதுமே தியாகி வள்ளியம்மையின் பெயர் நம் அனைவர் கவனத்திற்கும் வருவது இயல்பு. தனது பதின்பருவத்திலேயே தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளின் வேண்டுகோளுக்கிணங்க தென்னாப்பிரிக்க வெள்ளைத்துரைத்தனத்தை எதிர்த்துச் சிறைநிரப்பும் போராட்டத்தில் கலந்துகொண்ட அந்தச் சிறுமியின் அஞ்சாமையும் நெஞ்சுரமும் தியாக உணர்வும் காவியம் பாடிப் போற்றிடத் தக்கன.தில்லையாடி வள்ளியம்மையின் பெற்றோரையும்,அதுபோன்றே நூறு அல்லது நூற்றைம்பது குடும்பத்தினரைத் தென்னாப்பிரிக்காவுக்குப் பஞ்சம் பிழைக்க அழைத்துவந்த தில்லையாடி வேதியன்பிள்ளை இன்னும் வரலாற்றின் பேரேடுகளில்   பதிவுறவில்லை.

அப்படி அவர் என்னசெய்துவிட்டார்?மூன்றாண்டுக் காலம் காந்தியடிகளுக்குத் தமிழ் கற்றுக்கொடுத்த,காந்தியடிகளின் தமிழாசிரியர் தில்லையாடி வேதியன்பிள்ளை என்பது பலரும் அறியாத உண்மையாகும்.இதன் விளைவாகத்தான் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தமது ஆசிரமத்தில் தங்கியிருந்த தொழிலாளர் பிள்ளைகளுக்குத் தமிழ் சொல்லிக் கொடுப்பதைத் தமது பகுதிநேரப் பணியாகக் கொண்டிருந்ரதார்.அவர் நடத்தியது அறியாப் பிள்ளைகளுக்குத் தமிழ் அரிச்சுவடி கற்றுக்கொடுக்கும் பணி என்றாலும் அங்ஙனம் கற்றுக்கொடுக்கும் துணிவையும் தமிழறிவையும் அவருக்கு வழங்கிய தமிழாசான் தில்லையாடி வேதியன்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.

வேதியன்பிள்ளை தமிழ்ப்புலவரா? அல்லவே அல்ல. அவர் தென்னாப்பிரிக்காவுக்கு வந்து தொழில் நடத்திப் பொருளீட்ட வந்தவர்.அவரது குலமரபு குறிப்பிடத்தக்க சிறப்புடையதெனலாம்..ஆமாம்.அவர் தாயுமானவ அடிகளின் வழிமுறையில் ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்தவர் ஆவார்.தாயுமானவ அடிகளார் தமது மனைவி காலமானபின் தமது ஒரே மகன் கனகசபாபதியைத் தம் அண்ணன் பொறுப்பில் விடுத்துத் துறவு பூண்டுவிட்டார்.கனகசபாபதி>>சண்முகவடிவு>>கமலப்பண்டாரம்>>>கதிர்வேற் பிள்ளை_>தட்சிணாமூர்த்தி என வழிவழி வந்த மரபில் தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு இரு ஆண்மக்கள்;.மூத்தவர் வேதியன் பிள்ளை.இளையவர் முத்துக்குமாரசாமி.தட்சிணாமூர்த்தி அவர்கள் தம் மக்கள் சிறுபிள்ளைகளாக இருக்கும்போதே துறவு பூண்டு சென்றுவிட்டார்.அவர் வள்ளலாருடன் சென்றுவிட்டதாகச் செய்தி நிலவுகிறது.அதுவரை திருவாரூரில் இருந்த அக்குடும்பம் பின்னர் தில்லையாடிக்குக் குடிபெயர்ந்துவிட்டது.வேதியன் பிள்ளையின் தந்தைவழிப் பாட்டி(தட்சணாமூர்த்தியின் தாயார்) தமது சகோதரன் பெருநிலக்கிழாராகத்தில்லையாடியில் வளமிக்க வாழ்வுடன் விளங்குவதால் அங்கு அழைத்துச் சென்றுவிட்டார்.வேதியன் பிள்ளை தமிழ் கற்றுக்கொண்டது தமிழிசை மூவரில் ஒருவராகிய முத்துத்தாண்டவரிடம் என்னும் செய்தி அவருடைய புலமையின் ஆழம் எத்தகையதாயிருந்திருக்கும் என்னும் உண்மையை நமக்குப் புலப்படுத்துகிறது.

வேதியன் பிள்ளை இளமைப்பருவம் எய்தியவுடன் தமது சொந்த உழைப்பில் பொருளீட்டிக் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ளும் கடமையை உணர்ந்தார்.அந்த ஊரைச் சேர்ந்த விருத்தாசலம் பிள்ளை அப்போது தென்னாப்பிரிக்காவில் வணிகத்தில் ஈடுபட்டிருந்தார். அவர் போலவே தாமும் தென்னாப்பிரிக்காவுக்குப்

பிழைக்கச் செல்லலாம் எனத் திட்டமிட்டுப் பெரியவர்களிடம் இசைவு பெற்றுத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். பல்வேறு சிறுவணிகங்களில் ஈடுபட்டுப் பொருளீட்டினார்;அதே வேளையில் கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக்கும் சேர்ந்து பட்டமும் பெற்றார்.பெரிய செங்கற்காளவாய் அமைத்து வணிகம் செய்து பொருளீட்டினார்.

காந்தி அடிகள் தென்னாப்பிரிக்காவுக்கு வருவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே அங்கு வந்து வணிகச் சுற்றம் சூழ வளமுடன் வாழ்ந்துவந்த வேதியன்பிள்ளை இந்தியாவிலிருந்து வந்த அந்தக் குசராத்தி வழக்கறிஞரோடு முதலில் தொழில்முறைத் தொடர்பு கொண்டிருந்தார். வணிகர்—வழக்கறிஞர் என்னும் முறையிலே அத் தொடர்பு இருந்தது.சில ஆண்டுகளுக்குப் பின் தற்செயலாக ஒருமுறை திருக்குறள் ஒன்றினை ஆங்கிலத்தில் விளக்கி அதன் நயத்தை வேதியன்பிள்ளை கூறியபொழுது காந்தியடிகள் திருக்குறளையும் ஏனைய தமிழ் இலக்கியங்களையும்தமக்குக் கற்பிக்குமாறு வேண்டியவுடன் வணிகர் தமிழாசானாகிவிட்டர்.வழக்கறிஞர் தமிழ் மாணவர் ஆகிவிட்டார்.

வேதியன்பிள்ளை இருந்தது கிம்பர்லி நகரில்;கந்தியடிகள் இருந்தது கேப்டவுன் எனும் நகரில்.பெரும்பாலும் காந்தியடிகள் கிம்பர்லிக்குச் சென்று தமிழ் கற்றுவந்தார்.

ஒருமுறை மாலையில் தமிழ்ப்படிப்பு முடிந்ததும் மழையின் காரணமாக காந்தியடிகள் தாம் வழக்கமாகச் செல்லும் தொடர்வண்டியைத் தவறவிட்டுவிட்டார்.எனவே வேதியன்பிள்ளை இல்லத்திலேயே அன்று இரவு தங்க நேர்ந்தது.இதனை ஒரு மகிழ்வான வாய்ப்பாகக் கருதிய வேதியன்பிள்ளை கட்டிலில் பட்டுமெத்தையில் குளிருக்கு இதமான வெந்நீர் ஒத்தடம் கொடுத்துக் காந்தியடிகளைத் தூங்குமாறு வேண்டியுள்ளா அக்.கட்டிலையும் ஆடம்பரமான ஏற்பாடுகளையும் கண்ட காந்தியடிகள்"வேதியன் பிள்ளை! தென்னாப்பிரிக்காவில் நாம் (இந்தியர்கள்)எவ்வளவு பேர் வாழ்கிறோம்?"என வினவினாராம்.

தயக்கத்துடன் அங்கு வாழும் புலம்பெயர் இந்தியர் எண்ணிக்கையைப் பிள்ளை கூறினாராம்.

"இத்துணை இந்தியர்களும் இப்படிச் சொகுசான கட்டிலில் தான் தூங்குகிறார்களா?"என்பது காந்தியடிகளின் வினா.

கூலிகளாகவும் கட்டுமானத்தொழிலாளர்களாகவுமே பெரும்பான்மையோர் இருந்த சூழலில் பிள்ளை 'ஆமாம்'என்று கூறமுடியுமா?

"எனக்கு ஒரு கோணிப்பை இருந்தால் கொடுங்கள்.தரையில் விரித்துப் படுத்துக்கொள்கிறேன்."இது காந்தியடிகளின் வேண்டுகோள்.

வேறுவழியின்றிப் பார்சல்(பொதிமானப்) பணிக்காக அங்கே இருந்த ஓர் ஓலைப்பாயைப் பிள்ளை கொடுத்தார்.தரையில் அதனை விரித்துக் காந்தியடிகள் படுப்பதைக் கண்ணீர்மல்கப் பார்த்துக்கொண்டிருந்தார் பிள்ளை.

இங்கே கவனிக்கவேண்டியது,அங்கே அப்போது காந்தியடிகளாக இல்லாமல் வழக்கறிஞர் மோகன்சந்த் கரம்சந் காந்தியாகத் தான் அண்ணல் இருந்தார். எனினும் அந்தச் சூழலில் அவருக்கு வாய்த்திருந்த அத் துறவுள்ளம் தாயுமானவ அடிகள் வழிவந்த வேதியன்பிள்ளையை மெய்சிலிர்க்கச் செய்துவிட்டது.

“கல்லணையில் கண்துயிலக் கற்றனையோ காகுத்தா கரிய கோவே”என்னும் ஆழ்வாரின் ஏக்கத்தைப் போன்றே பிள்ளை அவர்களும் ஏங்கினார்

பரணில் படுத்துறங்கிய இராமனைக் கண்ணீர் மல்கக் காத்துநின்ற இலக்குவனைப் போலவே இரவெல்லாம் கண்ணீர்மல்கக் காந்தியடிகள் துயின்ற கோலத்தைப் பார்த்தவாறு துயருற்றிருந்தார்.

காந்தியடிகளின் போராட்டவாழ்வுக்கு உதவியாகவும் பிள்ளை செயற்பட்டார்.அப்போது வ.உ.சி.பெற்ற சிறைவாழ்வைக் கேள்விப்பட்டு உடனடியாக அவரது வழக்குச் செலவுக்குத் தம்மால் இயன்ற பொருளுதவியைச் செய்தார்.மாத்ந்தோறும் வ.உ.சி.யின் குடுமபத்திற்குப் பணம் அனுப்பி உதவினார்.வ.உ.சி.சிறையிலிருந்து வெளிவந்தபின்னர்,தமது நன்றியுணர்வைக் காட்டும் விதமாகத் தமக்குப் பிறந்த பெண்குழந்தைக்கு வேதவல்லி எனப் பெயரிட்டார்.(ஆண்பிள்ளை பிறக்கும் என்றும் வேதியன் எனப் பெயரிடவேண்டும் எனவும் அவர் நினைத்திருந்தார்.)

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவை விட்டு இந்தியாவுக்கு வந்தபோது வ.உ.சி.யின் வறுமைத்துயரையும் மண்ணெண்ணெய் விற்கும் அவலநிலையையும் கேள்வியுற்று அவருக்குக் கொடுக்குமாறு ஐயாயிரம் ரூபாய் கொடுத்தனுப்பினார்.ஆனால் இந்தியா வந்ததும் பல அலுவல்களில் மூழ்கிப்போன காந்தியடிகள் அதனை மறந்துவிட்டார்.பின்னர் வ.உ.சி.யே காந்தியடிகளுக்குப் பல மடல் விடுத்தும் பயனில்லை.வேதியன்பிள்ளை தென்னாப்பிரிக்காவிலிருந்து தமிழகம் வந்தபின்னர் தமது மைத்துனரையும் வ.உ.சி.யையும் காந்தியடிகளிடம் நேரில் அழைத்துச் சென்று செய்தியை நினைவூட்டி வாங்கித் தந்துள்ளார்.

உழவுத்தொழிலாளர்களாகப் பணியின்றிப் பஞ்சம் பிழைக்க வழிதேடிய பலரைத் தில்லையாடியிலிருந்து தென்னாப்பிரிக்காவுக்கு அழைத்துச் சென்றவர் பிள்ளையவர்களே.தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்துவந்த தொழிலாளர்களுள் ஒரே சிற்றூரிலிருந்து மிகுதியானவர்கள் வந்தனர் எனில் அந்த ஊர் தில்லையாடியே; அங்ஙனம் அழைத்துச் சென்றவர் பிள்ளையவர்களே.

எனவே தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்தபின் முதலில் தமது ஊருக்குத் தான் காந்தியடிகள் வரவேண்டுமென்னும் பிள்ளையின் வேண்டுகோளை ஏற்றும் வள்ளியம்மையின் தியாகத்தைப் போற்றும் வகையிலும் 1915-இல் காந்தியடிகள் வந்தார். அங்கே பெண்பிள்ளைகளுக்காக பிள்ளை நிறுவியிருந்த சுதர்ம பாலிகா கலாசாலையைத் திறந்தார்.தில்லையாடியில் அவர் வந்துசென்றதன் நினைவாக மண்டபம் கட்டப்பட்டுள்ளது வேதியன் பிள்ளைக்கு நான்கு மகன்கள்;மூன்று புதல்விகள்.அவரது இரண்டாம் புதல்வர் ஓய்வுபெற்ற தலைமையாசிரியராகிய தட்சிணாமூர்த்தி அவர்கள் (சில ஆண்டுகள் முன் மறைந்துவிட்டார்.)தென்னன் என்னும் புனைபெயரில் பல கவிதைத்தொகுப்புகள் எழுதி வெளியிட்டுள்ளார்.அகவை முதிர்ந்ததால் மறதி தலைதூக்கினாலும் காந்தியடிகளுக்குத் தமிழ் கற்றுக்கொடுத்தவர் தம் தந்தையார் என்னும் பெருமித உள்ளத்துடன் அவர் கூறிய செய்திகளே இக் கட்டுரை ஆக்கத்திற்குத் துணை புரிந்தன